தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPEMENT COUNCIL

அனைத்துலகத் தேர்வு

2008

தமிழ்மொழி

ஆண்டு 9

சுட்டெண்:

நேரம்: 150 நிமிடங்கள்

மொத்தப்புள்ளிகள் : 100

1) வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தேர்ந்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. தங்கநகைகள் தலைக்கணிந்த பெண்கள் எதற்கு உவமானமாகக் கூறப்பட்டுள்ளனர்?

அ) நெற்பயிர் ஆ) வாழைத்தோட்டம்
இ) பனைமரம் ஈ) தென்னந்தோப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. 'புதியதொரு வீடு நாடகம்' எத்தொழில் புரியும் மக்களுடன் தொடர்புடையது?

அ) ஏர்த்தொழில் ஆ) தச்சுத்தொழில்
இ) கடற்றொழில் ஈ) நெசவுத்தொழில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தமிழை ஒழுங்காகக் கற்காததனால் சில தமிழர் _____ பேசுகின்றனர்.

அ) அணுஅணுவாக ஆ) திக்கித்திக்கி
இ) அழுதுஅழுது ஈ) கத்திக்கத்தி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. மரத்தடி என்ற பகுசொல்லைப் பிரித்தால் _____ என வரும்.

அ) மரம்+அடி ஆ) மரம்+த்+அடி
இ) மரம்+அது+அடி ஈ) மரம்+அத்து+அடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. கால்+அடி = காலடி. இப்புணர்ச்சியின் வகை

அ) தோன்றல் ஆ) கெடுதல் இ) இயல்பு ஈ) திரிதல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. இரண்டகன் காக்கைவன்னியனால் காட்டிக் கொடுக்கப்பட்ட தமிழ் மன்னன்

அ) பண்டாரவன்னியன் ஆ) சங்கிலியன்
இ) கயிலைவன்னியன் ஈ) எல்லாளன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. கீழ்வருவனவற்றுள் பகாச்சொல்

அ) அவர் ஆ) தமிழர் இ) அரசு ஈ) மாவிலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. தங்களது வரலாறு என்று சிங்களவர் கூறும் புனைகதை நூலின் பெயர்.

அ) மகாவம்சம் ஆ) மகாபாரதம் இ) மகாவரலாறு ஈ) சிங்களவரலாறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. வளவன் சினத்தினால் பற்களை _____ எனக் கடித்தான். இதில் இடம்பெறவேண்டிய இரட்டைக் கிளவி

அ) கடுகடு ஆ) படபட இ) நெறுநெறு ஈ) விறுவிறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. விசயன் வந்திறங்கியபோது இலங்கையில் வாழ்ந்த மக்கள்

அ) இயக்கர் நாகர் ஆ) இயக்கர் வன்னியர்
இ) நாகர் வன்னியர் ஈ) சாகர் பௌத்தர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. பெயர், வினை, இடை, உரிச்சொற்களுள் உரிச்சொல்லுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) உடைய ஆ) இன் இ) அத்து ஈ) சால

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. 'ஆண்டு' - இது எவ்வகைப் பெயர்ச்சொல்?

அ) பொருள் ஆ) காலம் இ) தொழில் ஈ) சினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. அல்லும் பகலும் என்னும் இணைமொழி தரும் பொருள்.

அ) நாள்முழுதும் ஆ) காலையும் மாலையும்
இ) அங்கும்இங்கும் ஈ) அலைந்துதிரிந்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. ஒருவகை வினைச்சொல் காலங்காட்டாது. இது

அ) தெரிநிலைவினை ஆ) குறிப்புவினை
இ) எச்சவினை ஈ) குறைவினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. 'பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்' என்பது

அ) உயிர்வாழ்தல் ஆ) உயிர்விடுதல்
இ) பெருமூச்சுவிடுதல் ஈ) சீறுதல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. க்ட்ச்த்ப்ற் இவ்வெழுத்துக் கூட்டத்தை எவ்வின எழுத்தெனக் கூறுவர்?

அ) மெல்லினம் ஆ) இடையினம் இ) வல்லினம் ஈ) கூட்டினம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. உள்ளத்தில் உள்ளதை வெளியில் சொல்லமுடியாது தவிப்பதை விளக்கும் உவமைத்தொடர்

அ) ஏட்டுச் சுரைக்காய் போல ஆ) கிணற்றுத் தவளை போல
இ) அனலிடைப்பட்ட மெழுகு போல ஈ) ஊமை கண்ட கனவு போல

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. காவலன் என்ற பெயர்ச்சொல் நாலாம் வேற்றுமை ஏற்றால் அதன் வடிவம்

அ) காவலனை ஆ) காவலனுக்கு இ) காவலனால் ஈ) காவலனது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. இலங்கையில் ஐரோப்பியரது வருகையைத் தொடக்கி வைத்தவன்

அ) டபிள்யூ மென்டிசு ஆ) றோபேர்ட் நொக்சு
இ) டொன்சுவான் ஈ) லோறன்சோ டி அல்மெய்டா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. நாடு காக்கும் பணிக்காகத் தன் ஒரேயொரு மகனை போர்க்களம் நோக்கி அனுப்பினாள். இது எந்த இலக்கியத்தில் காணப்படுகிறது?

அ) அகநானூறு ஆ) திருக்குறள் இ) சிலப்பதிகாரம் ஈ) புறநானூறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. (குறள்) கீறிட்ட இடத்தில் வரவேண்டிய சொல்

தெய்வத்தால் _____ எனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்.

அ) ஆகாது ஆ) ஆகும் இ) ஆனது ஈ) ஆகிற

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை நிறுவி உலகெங்கும் தமிழ்மொழியின் சிறப்பைப் பறைசாற்றியவர்

அ) விபுலானந்த அடிகள் ஆ) தனிநாயக அடிகள்
இ) இளங்கோவடிகள் ஈ) சிவானந்த அடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. 'போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடின் தூற்றினும் தூற்றுவர்'. யார் இவர்?

அ) புலவர் ஆ) அயலார் இ) இரப்போர் ஈ) ஏழையர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. இருவர் சண்டை செய்வதைக் குறிக்கும் மரபுத்தொடர்

அ) கைபிசைதல் ஆ) கைப்பிடித்தல் இ) கைவிடுதல் ஈ) கைகலத்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. உருவம் சிறிதெனினும் சிறப்பில், பயனில் பெரியது என்னும் பொருளை விளக்கும் பழமொழி.

அ) இளமையிற் கல்வி சிலையிலெழுத்து.
ஆ) நிறைகுடம் தளம்பாது.
இ) குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்.
ஈ) கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. தரப்பட்டுள்ள சொற்றொடரில் உவமையணி உள்ள சொற்றொடர்

அ) செந்தமிழ் ஆ) பைங்கிளி இ) தேன்மொழி ஈ) முகமதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. தமிழ்நெடுங்கணக்கின் எழுத்துக்களின் தொகை.

அ) 216 ஆ) 247 இ) 217 ஈ) 30

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் தோன்றல் விகாரம் இடம்பெற்ற சொல்

அ) மாங்கன்று ஆ) மான்குட்டி இ) கற்சுவர் ஈ) பொற்றாலி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. சேர்மனியரான அல்பேர்ட் சுவைட்சர் போற்றிய பழந்தமிழ் நூல் எது?

அ) புறநானூறு ஆ) தொல்காப்பியம் இ) சிலப்பதிகாரம் ஈ) திருக்குறள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. கீழ்வருவனவற்றுள் ஒருசொல் பொருந்தாது. அதைக் கண்டறிக.

அ) திருக்குறள் ஆ) பொய்யாமொழி இ) பொதுமறை ஈ) அறநெறி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 15)

2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடைதருக.

பழங்கால மாந்தன் விலங்கொடு விலங்காகவே வாழ்ந்தான். காலப்போக்கில் ஏற்பட்ட சிந்தனை வளர்ச்சியானது, அவனை விலங்கு நடத்தையிலிருந்து மாறவைத்தது. அப்படி மாறி நாகரிக வளர்ச்சி அடைந்தபோதிலும் இயற்கையோடு இணைந்தே மாந்தவினம் வாழ்ந்தது. இன்றோ, இயற்கையைத் தன்வயப்படுத்தி 'இறப்பே அறியா உலகாக' வாழ்நிலத்தை மாற்ற மாந்தன் பெருமுயற்சி செய்து கொண்டிருக்கிறான். மருத்துவம், போக்குவரத்து, பயிர்ச்செய்கை போன்ற பல துறைகளில் அறிவியல் ஏற்படுத்திய, ஏற்படுத்திக் கொண்டிருக்கிற மாற்றங்கள் மிகுந்த வியப்பைத் தருகின்றன. எனினும், இத்தனை நன்மைகளைத் தரும் அறிவியல் இன்று அகில உலகத்துக்கும் அச்சுறுத்தலாகவும் விளங்குகிறது. அறிவியல் வளர்ச்சியின் மிகப் பாரிய படைப்பான அணுகுண்டு கணப்பொழுதிலே உலகை அழித்து விடக்கூடியது. மொழி, மதம், நிறம் போன்ற வேறுபாடுகளால் பகைகொண்டு நடத்தப்படும் போர்களுக்கு அறிவியல் வளர்ச்சியும் ஒருவகையில் காரணமாக இருக்கிறது. அத்துடன் இயற்கையின் அழிவுக்கும் காரணியாக அமைந்து, உலகையே அழிக்கும் அழிவுச்சக்தியாக இன்று மாறிக் கொண்டிருக்கிறது. அளவோடு எரிந்தால் அது விளக்கு. அளவு மீறினால் அது நெருப்பு. தீயைத் தகுந்த வழியில் பயன்படுத்த வேண்டும். அதுபோல், அறிவியல் அறிவையும் தெளிந்த அறிவு கொண்டு பயன்படுத்த வேண்டும்.

1. மாந்தவினம் நாகரிகமடைய உதவியது யாது?

_____

_____

2. அறிவியலின் மிகப் பாரிய படைப்பு எது?

3. நாடுகளுக்கு இடையில் போர்கள் நடப்பதற்குக் காரணம் என்ன?

4. ஆதியில் நாகரிகம் அடைந்த மாந்தன் எவ்வாறு வாழ்ந்தான்?

5. இந்த உலகின் அமைதிக்கு நீர் கூறும் அறிவுரை என்ன?

(புள்ளிகள் 10)

4) பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக

இன்றைக் கிருந்தாலும் நாளைக் கிருந்தாலும்
என்றைக்குமே ஒரு நாள் இறப்போம்
அன்றைக்குச் சாவதை இன்றைக்குப் போரினில்
ஆக்கி யமர்வதே பாக்கியமாம்

பாயும் படுக்கையு மாய்க்கிடந்து பல
நோயும் பிடுங்க மடிவதிலும்
காயும் பகைவரைக் காய்ந்து பொருதுநாம்
காயம் விடுவதே மேலாகும்

1. இப்பாடல் கூறும் பொதுப் பொருள் என்ன?

_____

_____

_____

2. காயம், பொருது - இச்சொற்களின் பொருளை விளக்குக.

_____

_____

_____

3. இந்நாட்டார் பாடல் எதைப் பாக்கியம் என்று கூறுகிறது?

_____

_____

_____

4. பாயும் படுக்கையுமாய்க் கிடக்கக் கரணியம் என்ன?

_____

_____

_____

5. இப்பாடலைப் பற்றிய உமது கருத்தை விளக்கவும்.

_____

_____

_____

(புள்ளிகள் 10)

4) கீழுள்ள பாடநூல் வினாக்கள் ஏழினுள் எவையேனும் ஐந்துக்கு விடை தருக.

1. தாய் எடுத்த தடிக்கு அஞ்சியோடிய மகன் போர்க்களத்தில் எவ்வாறு போரிட்டான்?

_____

_____

_____

2. மகாவம்சம் வரலாற்று நூலல்ல ஒரு புனைகதை என்பதற்குச் சான்றுகள் தருக.

_____

_____

_____

3. புலவர் ஏன் நாரையைத் தன் மனைவியிடம் தூதுபோகுமாறு கேட்டார்?

4. முதன்முதல் இலங்கையில் காலூன்றிய ஐரோப்பியன் யார்? அவன் எவ்வாறு இலங்கையை அடைந்தான்?

5. அல்பேர்ட் சுவைட்சர் திருக்குறள் பற்றிக் கொண்டிருக்கும் கருத்து என்ன?

6. காராளர் கை எத்தகையது?

7. 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு' - இப்பழமொழியை விளக்குக.

(புள்ளிகள் 10)

5) தரப்பட்டுள்ள அனைத்து இலக்கண வினாக்களுக்கும் விடை தருக.

1. உயிர்க்குற்றெழுத்து ஐந்தினதும் இனவெழுத்துக்களைத் தருக.

_____

_____

_____

2. பின்வரும் சொற்களைப் புணர்த்துக.

மண்+குடம் - _____

கல்+தூண் - _____

பனை+ஓலை - _____

3. கருத்து உருவாக்கத்தால் தமிழில் சொற்கள் நான்கு வகை. அவற்றுள் ஒன்று பெயர்ச்சொல். மற்ற மூன்றையும் எடுத்துக்காட்டுடன் தருக.

_____

_____

_____

4. வேற்றுமைகள் எட்டையும் தந்து, ஐந்தாம் வேற்றுமையை எடுத்துக்காட்டுடன் தருக.

_____

_____

_____

5. வடசொல் - தற்பவம், தற்சமம் என இருவகைப்படும். தற்சமம் என்பதை விளக்குக.

_____

_____

_____

(புள்ளிகள் 15)

6) மொழியியல் வினாக்களுக்கு முழுவிடை தருக.

1. கைகலத்தல், செவிசாய்த்தல் இவ்விரு சொற்களையும் வைத்து, தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

_____

_____

_____

2. கனிமொழி என்ற உவமையணிச் சொற்றொடரில் உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பவற்றை எடுத்துக்காட்டுக.

_____

_____

_____

3. அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி, இணைமொழி மூன்றுக்கும் எடுத்துக்காட்டு தருக.

_____

_____

_____

4. எதிர்ச்சொல் தருக.

எதிர்ப்பால்		**எதிர்ப்பொருள்**	
தோழன்	-	கருமை	- .....
கணவன்	-	கேடு	- .....
பிக்கு	-	போற்றல்	- .....
இறைவன்	-	நட்பு	- .....
சேவல்	-	பெண்மை	- .....

(புள்ளிகள் 10)

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, கீழுள்ள குறிப்புகளின் உதவியுடன் 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

தனிநாயகம் அடிகளார்.

'தாயின் தாலாட்டு' - பாடல் பற்றிய ஒரு விமர்சனம்

- உள்ளடக்கம்
- பாடலில் வரும் கதைமாந்தர் குணநலன்கள் (தாய், மகன், தந்தை)
- காட்சி தோன்றும் சூழல்
- மொழிநடை பற்றிய உமது கருத்து
- பாடல் பற்றிய உமது கருத்து

படத்தைப் பார்த்து ஒரு கதை எழுதுக.



- சிறுவர்களும் விளையாட்டும்
- வீட்டுவிலங்குகளுடன் கூடி இன்புறல்
- பூவரசும் சிறுவர்களும்
- சிற்றூர்புறம் இயற்கை
- போர்ச்சூழலும் ஏழ்மையும்

(புள்ளிகள் 20)

8. வாழிடமொழியில் தரப்பட்டுள்ள பந்தியை தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

ENGLISH

Jaal Library

In 1933, an elder Mr. M A Sellapph started a library at his house. In 1934 with his friend's support he transferred the library to a rented room at Hospital Road. The library started to function with 844 books.

With the leadership of the chairman of Jaffna Municipal council Mr. Sam Sabapathy money collection was started. Fundraising started through fun activities, carnivals, Indian artist cultural show and raffle tickets. More money was collected than what was expected. New building constructions were started in 1959, the construction was completed and a new library was opened. Within 15-20 years it became the greatest and the largest library in South East Asia. It helped Jaffna people to develop their knowledge. In 1981 the library that had consisted of nearly one hundred thousand books, was destroyed by the cruel activity of the Singhalese army.

FRANCAIS

Jaal Bibliotheque

En 1933, un ancien, M. M.A. Sellappah a mis en place (commencé) une bibliothèque dans sa maison. En 1934, avec l'aide de son ami, il a transféré la bibliothèque dans une pièce louée. La bibliothèque a commencé à fonctionner avec 844 livres. Sous la direction du responsable du Conseil Municipal de Jaffna, M.Sam Sabapathy, une collecte de dons a été organisée. La collecte a commencé grâce à des activités de jeux, des carnavals, un spectacle culturel des artistes indiens et la vente de tickets. Beaucoup d'argent a été collecté, plus que la somme espérée.

La construction d'un nouvel établissement a commencé et s'est achevée en 1959; une nouvelle bibliothèque a été ouverte. En 15-20 ans, elle est devenue la plus grande et la meilleure bibliothèque du Sud-Est de l'Asie. Elle a permis au peuple de Jaffna de développer ses connaissances.

En 1981, la bibliothèque, qui comptait 100 mille livres, a été détruite par les activités cruelles de l'armée cinghalaise.

DANSK

Jaal bibliotek

I 1933 startede hr. M.A Sellappa et bibliotek i sit hjem. Med hjælp fra vennerne lejede han et værelse på sygehusvej i Jaffna og flyttede biblioteket hertil i 1934. I starten var der kun 844 bøger på biblioteket. Under den daværende borgmester i Jaffna, Sam Sabapathy's ledelse, prøvede de at starte en pengeindsamling. Karneval, forestillinger med indiske artister og lykkelotto var måderne, hvormed pengene blev indsamlet. Pengeindsamlingen var større end forventet. Efter dette startede arbejdet med at bygge den nye biblioteksbygning. Bygningsarbejdet blev færdigt, og det nye Jaffna bibliotek blev åbnet i 1959. Inden for de næste

15-20 år udviklede biblioteket sig til at blive et af de største og bedste i hele Sydøstasien. Jaffna bibliotek har den stolthed, at den har givet Jaffnas indbyggere højere viden. I 1981 blev biblioteket brændt til grunde af de singalesiske soldaters voldelige handlinger.

DEUTSCH

Jaal Bücherei

Der Herr Mu. A. Selappa hat in seinem Haus im Jahre 1933 eine Bücherei eröffnet. 1934 zog er durch die Hilfe seiner Freunde mit der Bücherei in ein gemietetes Zimmer in die Jaalpanam Krankenhaus Straße. Mit 844 Büchern entstand eine Bücherei. Von da an begann der Versuch unter der Leitung des Bürgermeisters von Jaal, Sam Sapapathy Geld zu sammeln. Durch Karneval, künstlerische Veranstaltungen der indischen Künstler und Gewinnlotterien wurde Geld gesammelt. Man bekam mehr Geld als erwartet. Daraufhin begannen die Arbeiten für ein neues Büchereigebäude. Im Jahre 1959 vollendete man die Gebäudearbeiten und eröffnete in dem Gebäude die neue Jaal Bücherei. In 15- 20 Jahren entwickelte sich diese Bücherei zu einer der besten und größten in Südostasien. Diese hatte einen großen Anteil an dem Wissenswachstum der Menschen in Jaal. Die Bücherei, die ca. hunderttausend Bücher enthielt, wurde im Jahre 1981 durch das schreckliche Verbrechen der singhalesischen Armee in Brand gesetzt und zu Asche gemacht.

NORSK

Jaal bibliotek

I 1933 startet (åpnet) en utmerket/fremragende person, som het M.A. Sellappa, et bibliotek hjemme (på huset sitt). Med hjelp av vennene sine flyttet han biblioteket til et leidd rom på Sykehus gate i 1934. Biblioteket ble åpnet med 884 bøker. Daværende ordfører Sam Sabapathy i Jaffna ledet aksjonen for å samle penger. Samling av penger startet gjennom morsomme arrangementer, karnevaler, indiske kulturelle forestillinger og loddselging. Det ble samlet mer penger enn forventet. Det startet bygningsarbeid for biblioteket. I 1959 ble bygningsarbeidet fullført, og i dette bygget ble det nye Jaffna biblioteket åpnet. I løpet av 15-20 år ble dette biblioteket det beste og største biblioteket i sørøst Asia. Folk i Jaffna hadde stort utbytte av det, og det hjalp folk til å øke sin kunnskap. Da biblioteket i 1981 ble brent ned av grusomme singalesisk militære, hadde biblioteket cirka ett hundretusen bøker.

(புள்ளிகள் 10)

யாழ் நூல்நிலையம்